**Thuraisingam Jeyasanthini [(1)], Jeyapiratheeba. A [(2)]**

# மரமுந்திரிகை உற்பத்தியாளர்கள் எதிர்கொள்ளும் உற்பத்தி சந்தைப்படுத்தல் சார்ந்த பிரச்சினைகள் ஏறாவூர்பற்று பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு

1. Department of Economics, Eastern University, Sri Lanka (email: jesha555@gmail.com )
2. Department of Economics, Eastern University, Sri Lanka (ajeyapiratheeba@yahoo.com)

**ஆய்வுச்சுருக்கம்**

தரவுப்பகுப்பாய்வின் முடிவுகள் மரமுந்திரிகை உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்வதிலும் அதனை சந்தைப்படுத்துவதிலும் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்வதை எடுத்துக்காட்டுகின்றது. போதிய வர்த்தக முக்கியத்துவம் வாய்ந்த மரமுந்திரிகை உற்பத்தி செய்யப்படும் மாவட்டங்களில் ஒன்றாக மட்டக்களப்பு மாவட்டம் காணப்படுகின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்ணளவாக 40000 ஏக்கர்கள் மரமுந்திரிகை உற்பத்திக்கான நிலப்பகுதியாக காணப்படுகின்ற போதும் சுமார் 8500 – 9800 (Statistical data cashew corporation, Batticaloa, 2012) வரையிலான ஏக்கர்களிலே இன்று மரமுந்திரிகைச் செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தின் மரமுந்திரிகை உற்பத்திக்கு அதிக பங்களிப்பு நல்கும் பிரதேசங்களில் ஒன்றாக ஏறாவூர்பற்றுப் பிரதேசம் காணப்படுகின்றது. குறைந்த உற்பத்திச் செலவுடன் அதிக வருமானத்தை ஈட்டித்தரும் ஒரு துறையாக மரமுந்திரிகை காணப்படுகின்ற போதும் இத்துறை எதிர்கொள்ளும் பிரச்சினைகள் காரணமாக அதிக வருமானத்தைப் பெறமுடியாத நிலை காணப்படுகின்றது.

ஏறாவூர்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் சிறிய மற்றும் பாரியளவில் மரமுந்திரிகை உற்பத்தி மேற்கொள்ளும் உற்பத்தியாளர்களிலிருந்து 50 பேர் எழுமாறாகத் தெரிவு செய்யப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பெறப்பட்ட தரவுகள் புள்ளிவிபர நுட்பங்களுடாக பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவு பெறப்பட்டது. ஏறாவூர்பற்று பிரதேசத்தில் மரமுந்திரிகை உற்பத்தி செய்பவர்களில் 92% மானோர் தமது சொந்த காணியிலும் 8 சதவீதமானோர் குத்தகை மற்றும் உறவினர் காணிகளிலும் தமது உற்பத்தியினை மேற்கொள்கின்றனர். 10000 – 20000 வரையிலான வருமானமே அதிகமானோரால் பெறப்படுகின்றது. உற்பத்தியாளர்களில் 52% மானோர் உற்பத்தியின் சந்தை விலை தொடர்பில் அறியாதவர்களாக காணப்படுகின்றனர். உற்பத்திகளை சந்தைப்படுத்தும் போது 92% மானோர் எவ்வித சுவை சேர்தலுமின்றியே விற்பனை செய்கிறனர். உற்பத்தியாளர்களில் 75% மானோர் இடைத்தரகர்கள் மூலமும் 25% மானோர் நேரடியாகவும் சந்தைப்படுத்துகின்றனர். உற்பத்தி சந்தைப்படுத்தல் தொடர்பில் இப்பிரதேச

உற்பத்தியாளர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்.

**கலைச் சொற்கள்**: உற்பத்தி, சந்தைப்படுத்தல், வருமானம், விலை, மேம்படுத்தல்

**அறிமுகம்**

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் ஒன்றான இலங்கையின் விவசாய உற்பத்திகளுள் ஒன்றாக மரமுந்திரிகை உற்பத்தி காணப்படுகின்றது. இதன் முக்கியத்துவம் காரணமாக 1973 ஆம் ஆண்டில் SLCC (Sri Lankan Cashew Corporation) உருவாக்கப்பட்டு மரமுந்திரிகை உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் பல்வேறு செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனால் இவ் உற்பத்தியில் ஓர் வளர்ச்சிப் போக்கினை அவதானிக்க முடிகின்றது. இலங்கையின் ஏனைய வர்த்தகப் பயிர்களோடு ஒப்பிடுகையில் உலர் நிலப்பகுதிகளிலும் செழிப்பாக வளரும் இதன் தன்மை சிறப்பியல்பு வாய்ந்த ஒன்றாகும். சுவை மற்றும் அருமைத்தன்மை காரணமாக சர்வதேச சந்தையில் அதிக கேள்வியுள்ள ஒரு உற்பத்தியாக மரமுந்திரிகை காணப்படுகின்றது.

உலகளாவிய ரீதியில் பிரபல்யம் பெற்றுள்ள மாமுந்திரிகை உற்பத்தித் துறை தொடர்பாக பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இலங்கை வயம்ப பல்கலைக் கழகத்தின் விவசாய மற்றும் நடுகை முகாமைத்துவ பீடத்தினர் (Agriculture & Plantation Management) மரமுந்திரிகை உற்பத்தித்துறை தொடர்பில் ஆய்வினை மேற்கொண்டு பல்வேறு பிரச்சினைகளை அடையாளம் கண்டுள்ளனர். அதில் குறிப்பாக உற்பத்தி தொழில்நுட்பம் மற்றும் சந்தைப்படுத்தல் சார்ந்த பிரச்சினைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. (Jeyasekara.S.J.B.A &Jeyasekara. N.E.M, 2003) இதே போன்று தன்சானிய நாட்டின் ஆய்வாளரான Donald Mitchell, June 2004. மேற்கொண்ட Tanzania's Cashew Sector: Constraints and Challenges in a Global Environment எனும் ஆய்வின் மூலம் அந் நாட்டின் மரமுந்திரிகை உற்பத்தியாளர்கள் உற்பத்திப் பொருளின் தரத்தினைப் பேணல் மற்றும் உற்பத்திச் செலவு, பிந்தங்கிய உற்பத்தி தொழில் நுட்பம் போன்ற பிரச்சினைகளை எதிர்கொள்வதை அடையாளம் கண்டுள்ளார். (Donald Mitchell, 2004)

இலங்கையின் மரமுந்திரிகை உற்பத்தியைப் பொறுத்தவரை வடக்கு, கிழக்கு மற்றும் வடமேற்கு மாகாணங்களில் அதிகம் பயிரிடப்படுகின்றது. அதிகளவான சிறுஉற்பத்தி முயற்சியாளர்களை உள்வாங்கக் கூடிய இத்துறையில் பெரும் எண்ணிக்கையிலானோர் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர். இலங்கையின் 90 வீதமான உற்பத்தியானது பெண்களினால் குடிசைக் கைத்தொழிலாகவே மேற்கொள்ளப் படுகின்றது. (Survey on cashew cultivation in Sri Lanka. 1996) வர்த்தக முக்கியத்துவம் வாய்ந்த மரமுந்திரிகை உற்பத்தி செய்யப்படும் மாவட்டங்களில் ஒன்றாக மட்டக்களப்பு மாவட்டம் காணப்படுகின்றது. கடற்கரையை அண்மிய பகுதிகளில் அதிகம் பயிரிடப்படும் மரமுந்திரிகையானது கடந்த காலங்களில் காணப்பட்ட யுத்த அச்சுறுத்தல் மற்றும் பாதுகாப்புக் காரணங்களால் சில பகுதிகளில் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டது. தற்காலத்தில் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதை அடுத்து இப்பிரதேசத்தில் இத்தொழில் மீளவும் தலைதூக்க ஆரம்பித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்னளவாக 40000 ஏக்கர்கள் மரமுந்திரிகை உற்பத்திக்கான நிலப்பகுதியாக காணப்படுகின்ற போதும் சுமார் 8500 – 9800 (Statistical data cashew corporation, Batticaloa, 2012) வரையிலான ஏக்கர்களிலே இன்று மாமுந்திரிகைச் செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. வாழைச்சேனை, ஆரையம்பதி, மண்முனைத் தென்எரிவில்பற்று, ஏறாவூர்பற்று போன்ற இடங்களில் இது அதிகளவில் உற்பத்தி செய்யப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மரமுந்திரிகை உற்பத்திக்கு அதிக பங்களிப்பு நல்கும் பிரதேசங்களில் ஒன்றாக ஏறாவூர்பற்றுப் பிரதேசம் காணப்படுகின்றது. 2080 ஏக்கர் அளவில் இங்கு மரமுந்திரிகை பயிரிடப்படுகின்றது. இங்குள்ள களுவங்கேணி, தளவாய், தன்னாமுனை, மயிலம்பாவெளி, செங்கலடி போன்ற பிரதேசங்களில் மரமுந்திரிகை அதிகளவில் பயிரிடப்படுகின்றது. பெரும்பாலும் குடிசைக் கைத்தொழிலாக மேற்கொள்ளப்படும் இவ் உற்பத்தியானது அதிக வருமானத்தினை உழைப்பதற்கான ஒரு வழிமுறையாகவே காணப்படுகின்றது.

## ஆய்வுப்பிரச்சினை


மரமுந்திரிகை அதிகம் பயிரிடப்படும் பிதேசங்களுள் ஏறாவூர்பற்று பிரதேசமும் ஒன்றாகும். குறைந்த உற்பத்திச் செலவுடன் அதிக வருமானத்தை ஈட்டித்தரும் ஒரு துறையாக இது காணப்படுகின்ற போதும் இதன் மூலம் அதிக வருமானத்தைப் பெறமுடியாத நிலை காணப்படுகின்றது. (Statistical data ,cashew corporation, Batticaloa, 2012) இந்நிலைமை இவ் உற்பத்தித்துறையில் பிரச்சினைகள் காணப்படுவதைப் புலப்படுத்துகின்றது. எனவே ஏறாவூர்பற்று பிரதேசத்தில் வாழும் உற்பத்தியாளர்கள் எதிர்கொள்ளும் உற்பத்தி சந்தைப்படுத்தல் சார்ந்த பிரச்சினைகளை இனங்காண்பதே இதன் ஆய்வுப்பிரச்சினையாகும்.

## ஆய்வின் நோக்கம்

இவ் ஆய்வானது மரமுந்திரிகை உற்பத்தியாளர்கள் எதிர்கொள்ளும் உற்பத்தி, சந்தைப்படுத்தல் சார்ந்த பிரச்சினைகளை இனங்கணல் எனும் பிரதான நோக்கத்தினைக் கொண்டுள்ளது. இப்பிரதான நோக்கத்தினை அடையும் வகையில் பின்வரும் சிறப்பு நோக்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளது.

- ✓ மரமுந்திரிகை உற்பத்தியாளர்கள் எதிர்கொள்ளும் உற்பத்தி சந்தைப்படுத்தல் பிரச்சினைகளை இனங்கணல்
- ✓ பிரச்சினைக்கான காரணங்களை இனங்கண்டு பொருத்தமான சிபாரிசுகளை முன்வைத்தல்

## எண்ணக்கருவாக்கம்




மூலம்: ஆய்வு நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டது.

இவ் எண்ணக்கருவாக்கத்தை அடிப்படையாகக் கொண்டே ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## ஆய்வு முறையியல்

இதற்கான தரவுகளானது முதலாம்நிலைத் தரவுகள் மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகள் என்றடிப்படையில் பெறப்பட்டுள்ளது. முதல்நிலைத் தரவுகளானது பிரதானமாக கட்டமைக்கப்பட்ட வினாக்கொத்து மற்றும் அவதானம்இ நேர்கானல்இ கலந்துரையாடல் மூலம் பெறப்பட்டதுடன், இரண்டாம் நிலைத் தரவுகள் நூல்கள்இ ஆவணங்கள் மற்றும் நிறுவன அறிக்கைகள் போன்றவற்றிலிருந்து பெறப்பட்டுள்ளது.

ஆய்வின் போது பெறப்பட்ட தரவுகளானது (Microsoft Excel) ஐ பயன்படுத்தி விகிதாசார அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளது. இதன் மூலம் பெறப்பட்ட முடிவுகள் அட்டவணைகள் வரைபடங்களுடாக விளக்கப்பட்டுள்ளது.

ஏறாவூர்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் சிறிய மற்றும் பாரியளவில் மரமுந்திரிகை உற்பத்தி மேற்கொள்ளும் உற்பத்தியாளர்களிலிருந்து 50 பேர் எழுமாறாகத் தெரிவு செய்யப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பெறப்பட்ட தரவுகள் புள்ளிவிபர நுட்பங்களுடாக பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவு பெறப்பட்டது.

## தரவுப் பகுப்பாய்வும் கலந்துரையாடலும்

### தனிப்பட்ட தரவுகள்

ஆய்வுக்கு மாதிரிகளாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள மரமுந்திரிகை உற்பத்தியாளர்களில் 58 வீதமானோர் ஆண்களாகவும் 42 வீதமானோர் பெண்களாகவும் காணப்படுகின்றனர். குடும்பத்திற்குத் தலைமைதாங்குவோர் என்றடிப்படையிலேயே இத் தரவு பெறப்பட்டுள்ளது. மரத்திலிருந்து விதையினைப் பெறுதல் மற்றும் அதனை விற்பனைக்கேற்ற வகையில் மாற்றியமைக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களில் 82% மானோர் பெண்களாவர். மரமுந்திரிகை உற்பத்தியாளர்களில் 54% மானோர் தரம் 1 – 9 வரையிலான கல்வியைப் பெற்றவர்களாகவே காணப்படுகின்றனர். உற்பத்தியாளர்களில் 58% மானோர் 10000 ற்கும் குறைந்த மாதாந்த வருமானத்தையே பெறுகின்றனர். நடுத்தர வருமானம் பெறுபவர்களே இவ் உற்பத்தியில் அதிகம் ஈடுபடுகின்றனர்.

## ஆய்வுத் தரவுகள்

### விளைநிலப் பிரதேசமும் அதன் அளவும்

ஏறாவூர்பற்று பிரதேசத்தில் மரமுந்திரிகை உற்பத்தி செய்பவர்களில் 92% மானோர் தமது சொந்த காணியிலும் 8 சதவீதமானோர் குத்தகை மற்றும் உறவினர் காணிகளிலும் தமது உற்பத்தியினை மேற்கொள்கின்றனர். மரமுந்திரிகை உற்பத்தியானது இப்பிரதேசத்தினைப் பொறுத்தவரை ஓர் குடிசைக் கைத்தொழிலாகவே மேற்கொள்ளப் படுகின்றது. இதன் காரணமாக பொரும்பாலானோர் வீட்டுத் தோட்டத்திலேயே தமது உற்பத்தியினை மேற்கொள்கின்றனர். 42 சதவீதமானோர் இவ்வாறே தமது உற்பத்தியினை மேற்கொள்கின்றனர். 36 சதவீதமானோர் வீட்டிலிருந்து தொலைவிலும், 22% மானோர் தமது குடியிருப்பிற்கு அருகில் உள்ள தமது காணிகளிலும் மரமுந்திரிகைச் செய்கையினை மேற்கொள்கின்றனர்.

முந்திரிகை மேற்கொள்ளப்படும் அளவினை நோக்குகையில் 42% மானோர் 1 மற்றும் அதற்கு குறைந்த நிலப்பரப்பிலேயே தமது


உற்பத்தியினை மேற்கொள்கின்றனர். 20% மானோர் மட்டுமே 5ற்கு மேற்பட்ட ஏக்கர்களில் தமது உற்பத்தியினை மேற்கொள்கின்றனர். உற்பத்திக்கான அதிகளவிலான வாய்ப்புக்கள் காணப்படுகின்றபோதும் இங்கு குறைவான நிலப்பரப்பில் உற்பத்தி இடம்பெறுவதற்கான பிரதான காரணம் மக்கள் மத்தியில் இத்தொழில் தொடர்பிலான முக்கியத்துவம் உணரப்படாமையே ஆகும்.

உற்பத்தி தொடர்பான பாதுகாப்பினை நோக்குகையில் அதிகமானோர் தோட்டம் தொடர்பில் தகுந்த பாதுகாப்பற்றவர்களாகக் காணப்படுகின்றனர். இதில் 34 வீதமானோர் முழுமையான பாதுகாப்பின்மையினையும் 48 வீதமானோர் ஓரளவு பாதுகாப்பினையும் கொண்டுள்ளனர். 18 வீதமானோர் மட்டுமே தமது தோட்டம் தொடர்பில் முழுமையான பாதுகாப்பினைக் கொண்டுள்ளனர். தோட்டங்களில் மரமுந்திரிகை கறிக்காகவும் வேறு தேவைகளுக்காகவும் பழமாகும் முன்னரே பறிக்கப்படுவதனால் அதிக வெளியீட்டைப் பெற முடிவதில்லை என 72% மானோர் கருத்துத் தெரிவித்துள்ளனர். நோய்பீடைத் தாக்கத்தினால் அதிக விளைச்சலைப் பெற முடியாதவர்களாக 85மூ மானோர் காணப்படுகின்றனர்.

### உற்பத்தியாளர் வருமானம்

அதிக வருமானத்தை ஈட்டித் தரும் தொழில்களுள் ஒன்றாக மரமுந்திரிகை தொழில் காணப்படுகின்றது. ஏறாவூர்பற்றுப் பிரதேசத்தில் உள்ளவர்கள் இத் தொழில் மூலம் பெறும் வருமானம் பின்வருமாறு அமைகின்றது.

**அட்டவணை: 1 வருடாந்த வருமானம்**




மூலம்: கள ஆய்வு

10000 – 20000 வரையிலான வருமானமே அதிகமானோரால் பெறப்படுகின்றது. பருவகாலத்தில் மாத்திரமே இதன் மூலம் வருமானம் பெறப்படுகின்றது. பெறப்படும் வருமானத்தில் 85% சதவவீதமானவை குடும்பத்தேவைகளுக்குப் பயன்படுவதுடன் தோட்டத்தின் பராமரிப்புக்கு 15% மானவையே பயன்படுத்தப்படுகின்றது. இதனால் நீண்டகாலத்தில் மரங்களின் விளைச்சல் குறைவடைவதுடன் வருமானத்தில் வீழ்ச்சியையும் ஏற்படுத்தும் அபாயம் காணப்படுகின்றது.

### உற்பத்தித் தொழில்நுட்பம்

நடுகை செய்யப்படும் மரமுந்திரிகை கன்றுகளில் பெலும்பாலானவை வீட்டில் பதியம் செய்த கன்றுகளாகவே காணப்படுகின்றன. 54 சத வீதமானோர் இவ்வாறான கன்றுகளையே நடுகை செய்துள்ளனர். 46 வீதமானோர் உயர் விளைதிறன் கொண்ட கன்றுளை வாங்கியும் நிறுவனங்களிடமிருந்து பெற்றும் நடுகை செய்துள்ளனர். பழங்களை மரத்திலிருந்து பறித்தெடுப்பதில் 82% மானோர் பொருத்தமற்ற முறையையே கையாள்கின்றனர். இதனால் அதிகளவிலான இழப்புக்கள் ஏற்படுகின்றது. நவீன முறைகள் பற்றிய அறிவோ சாதன வசதிகளோ இவர்களிடம் இல்லாத நிலை காணப்படுகின்றது.

**பயிற்சி ஆலோசனைகள்**

இப்பிரதேசத்தில் உள்ள அதிகளவான உற்பத்தியாளர்கள் தொழில் தொடர்பில் போதிய பயிற்சியற்றவர்களாகவே காணப்படுகின்றனர். 62% மானோர் பயிற்சியற்றவர்களாகக் காணப்படுகின்றனர். 38% மானோர் பயிற்ச்சி பெற்றவர்களாக உள்ளனர்.

**விலை**

உற்பத்தியாளர்களில் 52% மானோர் உற்பத்தியின் சந்தை விலை தொடர்பில் அறியாதவர்களாக காணப்படுகின்றனர். 42% மானோர் மாத்திரமே ஓரளவேனும் சந்தையில் காணப்படும் விலைகள் தொடர்பில் அறிந்துள்ளனர். இதனால் நியாய விலையினைப் பெற முடியாதவர்களாகக் காணப்படுகின்றனர்.

**மேம்படுத்தல்**

உற்பத்திகளை சந்தைப்படுத்தும் போது 92% மானோர் எவ்வித சுவை சேர்தலுமின்றியே விற்பனை செனய்கிறனர். எவ்வாறு சுவை சேர்ப்பது என்பது தொடர்பான பயிற்சியின்மையே இதற்குப் பிரதான காரணமாகும். போதிய தொழில்நுட்ப அறிவின்மையால் உற்பத்திகளில் பெரும் பகுதி கஜு வை உடைத்தெடுக்கும் போது சிதைவடைகின்றது. இதனால் அதன் தரம்

மூலதனமின்மை, தொழில்சார் பயிற்சிகளின்மை, நோய்பீடைத் தாக்கங்கள், போதிய தொழில்நுட்ப வசதிகள் கிடைக்காமை, தோட்டத்திற்கான பாதுகாப்பின்மை போன்றன அவற்றுள் சிலவாகும். அதேபோல் தமது உற்பத்தியினை சந்தைப்படுத்துவதிலும் இவர்கள் பாரிய பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். உற்பத்திகளுக்கான

குறைவடைகின்றது. 57% மானோர் இவ்வாறான பிரச்சினையை எதிர்கொள்கின்றனர். இதனை மேம்படுத்தும் போதுதான் அதிக சந்தைவாய்ப்பைப் பெறமுடியம்.

**சந்தைவாய்ப்பு**

ஏறாவூர்பற்று பிரதேசத்தில் மரமுந்திரிகைக்கான சந்தைவாய்ப்பினை நோக்குகையில் அதிகமானோர் சந்தைவாய்ப்புத் தொடர்பில் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். உற்பத்தியாளர்களில் அதிகமானோர் சுயற ஊயளாநற (உடைத்தெடுக்காத கஜு) வாகவே விற்பனை செய்வதனால் இவர்களால் அதிக விலையினைப் பெற முடிவதில்லை. உற்பத்தியாளர்களில் 66% மானோர் சுயற ஊயளாநற வாகவும் 34% மானோர் மாத்திரமே உடைத்தெடுத்த கஜு வாக விற்பனை செய்கின்றனர். 75% மானோர் இடைத்தரகர்கள் மூலமும் 25% மானோர் நேரடியாகவும் சந்தைப்படுத்துகின்றனர். தரகர்கள் மூலம் அதிகமானோர் தமது உற்பத்திகளை சந்தைப்படுத்துவதனால் இலாபங்களில் பெரும் பகுதியை இவர்கள் இழக்கின்றனர். போக்குவரத்து வசதிகளில் காணப்படும் குறைபாடுகள் 64% மானோருக்கு சந்தைப்படுத்துவதில் இடையூறுகளை ஏற்படுத்தியுள்ளது.

**ஆய்வின் முடிவு**

நியாயவிலை கிடைக்காமை, உற்பத்திக்கு பாரிய கேள்வி காணப்படினும் சந்தைபற்றிய பூரண தகவலின்மையினால் இவர்களின் பேரம்பேசும்சக்தி குறைக்கப்பட்டு குறைந்த விலையில் தமது உற்பத்தியினை சந்தைப்படுத்த வேண்டிய நிலையிலுள்ளனர். இடைத்தரகர்களின் தலையீட்டினால் தமது உற்பத்திகளிலிருந்து அதிக இலாபத்தைப் பெறமுடியாதவர்களாக இவர்கள்

காணப்படுகின்றனர். இவ்வாறாக உற்பத்தி சந்தைப்படுத்தலில் அதிக சவால்களை எதிர்கொள்கின்றனர்.

**சிபாரிசுகள்**

மரமுந்திரிகை உற்பத்தியாளர்கள் முற்றுமுழுதாக மரமுந்திரிகையை மட்டும் பயிரிடாமல் மரமுந்திரிகைக்கு இடைப்பட்ட நிலப்பரப்பில் வேறுபயிர்களைப் பயிரிட்டால் கூடுதலான வருமானத்தை ஈட்டிக் கொள்ள முடியும்.

மரமுந்திரிகை பழத்திலிருந்து பழச்சாறு ஜேம் போன்றவற்றையும் விதையிலிருந்து கஜூ வினை உடைத்தெடுக்கும் போது எண்ணெய் தயாரித்தல் போன்ற பல உற்பத்திகளை மேற்கொள்ளலாம்.

மரமுந்திரிகை உற்பத்தியாளர்களுக்கு நவீன தொழில்நுட்பப் பயிற்சியினை மரமுந்திரிகை உற்பத்தியை ஊக்குவிக்கும் அமைப்புக்கள் வழங்குதல் வேண்டும். இதன் மூலம் புதிய இயந்திர வசதிகளை உற்பத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவதன் மூலம் வீண்விரையமாதல் தவிர்க்கப்படும்.

மரமுந்திரிகை உற்பத்தியாளர்களுக்கு உற்பத்திகளுக்கு மேலும் பெறுமதி சேர்தல் தொடர்பான அறிவினை வழங்க வேண்டும்.

தொழிலின் முக்கியத்துவம் தொடர்பான விழிப்புணர்வினையும் ஆலோசனைகளையும் தொழில்சார் அமைப்புக்கள் வழங்குவதன் மூலம் இப் பிரதேசத்தில் மரமுந்திரிகை உற்பத்தியின் மூலமான நன்மையினை அதிகரிக்க முடியும்.

உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக கடன்களை வழங்குவதுடன் உடைத்தெடுக்கும் உபகரணங்களை மானியமாகவோ அல்லது கடனடிப்படையிலோ வழங்கலாம்.

இச்சிபாரிசுகள் குறித்த துறையின் அபிவிருத்தியினை வேண்டித் தொழிற்படும் அமைப்புக்களுடாக சரியான முறையில் அமுல்படுத்தப்பட்டாலேயன்றி மரமுந்திரிகை உற்பத்தித்துறையில் முன்னேற்றத்தைக் காணமுடியாது.

**உசாத்துணைகள்**

1. Jeyasekara.S.J.B.A &Jeyasekara. N.E.M, 2003, cashew cultivation principal and technttiques, Sri Lankan cashew corporation, Colombo.

2. Statistical data, cashew corporation, Batticaloa, 2012

3. Survey on cashew cultivation in Sri Lanka. 1996, department of census and statistics and Sri Lanka cashew corporation. (1997).

4. Donald Mitchell .2004 ,Tanzania's Cashew Sector: Constraints and Challenges in A Global Environment, Africa Region Working Paper Series No. 70